என்ன நியாயம்? (குறுக்கீடு) நீங்களெல்லாம் பேசுகிறீர்கள். நான் பேசினால் கேட்க மாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். இப்போது மணி 12–30 ஆகிவிட்டது. எனக்கு இன்னும் நிறைய அலுவல்கள் இருக்கின்றன. அடுத்தது, மாண்புமிகு முதலமைச்சருடைய விதி 110–ன்கீழான அறிவிப்பு இருக்கின்றது. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி, தகவல் கோரல் என்கின்ற முறையிலே (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்டவை அனைத்தையும் நான் ஒத்துக்கொண்டேன். (குறுக்கீடு) மூன்று கேட்டீர்கள். மூன்றையும் நான் ஒத்துக்கொண்டு எடுத்துக்கொண்டேன். எல்லோரும் கேள்வி கேட்க வேண்டுமென்றால் எப்படி? நீங்கள் கேட்கிறீர்கள், இதோ பாருங்கள், அவர் எழுந்து நிற்கின்றார். நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) இல்லை, இது முறையல்ல. சபையை நடத்துவதற்கு நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும். இப்படி பேசிக் கொண்டிருந்தால் முறையல்ல, விடுங்கள். (குறுக்கீடு)

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் நவீன அரிசி ஆலைகள் நிறுவுதல், துருப்பிடிக்காத மேற்கூரை, சூரிய மின்சக்தியுடன் குளிர்சாதனக் கிடங்கு அமைத்தல் உள்ளிட்ட உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் நலன் கருதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படும் நெல்லினை உடனடியாக அரவை செய்திட ஏதுவாக, கூடுதலாக நவீன அரிசி ஆலைகளை நிறுவிட வேண்டியது அவசியமாகிறது. எனவே, உயர் தொழில்நுட்பத்துடன்கூடிய நவீன இயந்திரங்களைக் கொண்டு தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் தினசரி 100 மெட்ரிக் டன் அரவைத் திறனுடன்கூடிய நவீன அரிசி ஆலை சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

2019 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பயன்பாட்டில் உள்ள சொந்தக் கிடங்குகளின் கொள்ளளவினை அதிகரிக்கவும், எதிர்காலத்தில் உணவு தானியங்களை இருப்பு வைப்பதற்கான தேவையினைக் கருத்தில் கொண்டும், கூடுதலாக 36,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 28 கிடங்குகள் பல்வேறு இடங்களில் 59.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–25

3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கல்நார் மேற்கூரைகளுடன் இயங்கிவரும் (AC Sheet roof) *55 கிடங்குகளில் மேற்கூரைகளை அகற்றிவிட்டு, நவீன மேற்கூரை அமைப்பான வண்ணம் தீட்டப்பட்ட ஸ்திரத்தன்மை அதிகம் கொண்ட துருப்பிடிக்காத மேற்கூரை அமைக்கும் பணி 21.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கிவரும் கிடங்குகளின் வளாகத்தில் உள்ள பழுதடைந்த சாலைகளுக்குப் பதிலாக நீண்டநாள் பயன்படுத்தும் வகையிலும், மழைக் காலங்களில் சேதமடையாத வகையிலும், 54.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்மூலம் காய்கறிகள், புளி, பழங்கள், பருப்பு வகைகள், பூக்கள் மற்றும் இதர விவசாயப் பொருட்களைப் பாதுகாப்பான முறையில் சேமித்து வைத்திட 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சூரிய மின்சக்தியுடன் இயங்கக்கூடிய குளிர்சாதனக் கிடங்கு நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சென்னை மத்திய கூட்டுறவு வங்கி தலைமை அலுவலகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நவீனமயமாக்குதல், அம்மா சிறு கூட்டுறவு அங்காடிகள் தொடங்குதல் உள்ளிட்ட கூட்டுறவுத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*